[ஈன்துழாயம்மான்தன்னை - எங்கேகாண்கேன்] - ஐச்வர்ய ஸமேதமான திருத்துழாய்மாலையையுடைய ஸர்வேச்வரனைக் கண்டல்லது ஷணிக்கமாட்டாதபடி சபல

ணன நான் எங்கேகாணக்கடவேன்? [என்றென்ற] - நிரந்தரமாகச் சொல்லி. ஒரு கால்சொல்லி "ஆசையை ஆவிஷ்கரித்தோமிறே" என்று ஆறியிருக்கிறாரல்லரே; லாபத்தளவும் சொல்லுமித்தனையிறே. [அங்கேதாழ்ந்த சொற்களால்]- தோளும், தோள்மாலையிலும் அந்த ஸௌஷித்வத்திலும் ப்ரவணமான சொற்களாலே. [அந்தண்குருகூர்ச் சடகோபன்] - "உவதிஷ்டதூசோஅஸ்மவெழுவ்ராயய:" என்னுமாபோலே, இவ்வாற்றுமைக்கெல் லாம் இடங்கொடுத்த ஆழ்வார் என்று ஆளவந்தார் நிர்வாஹம்: [செங்கேழ்சொன்ன] - செவ்விதாகச்சொன்ன; நினைவும், சொல்லும், செயலும் ஒருபடிப்பட்டிருக்கை. [செங் கேழ்] - செவ்விதாக என்றபடி, [இங்கேயித்யாதி] - இஹலோகத்திலே இஜ்ஜந்மத் திலே திவாராத்ரவிஹாமின்றிக்கே ஸுகவநுஷவம்பண்ணி மகிழப்பெறுவர். "ஆளக்கூப் பிட்டனைத்தக்கால்" என்று - கூப்பிடவந்து முகங்காட்டாததத்தால் பிறந்த தன்னுடைய அவத்யத்தை, ஆழ்வாரை ஆஸ்ரயித்தார்பக்கலிலே தீருமாயிற்று அவன்; ஸார்யையோடே ஸ்வறுப்புண்டானால் அவள்பக்கல் முகம்பெறுகைக்கு ப்ரஜைகளை ஸ்ருஷிப்பாரைப் போலே.

ஈடு.—நிகமத்தில்-இத்திருவாய்மொழிவல்லார், தாம்பட்ட துக்கம்படாதே, இஹலோகத்திலே இஜ்ஜந்மத்திலே அவனைப்பெற்று நிரந்தரமாக ஸுகிப்பரென்கிறார்.

[ஈன்துழாயம்மான்தன்னையான்எங்கேகாண்கேன்] - ஐஸ்வர்ய ஸூசகமான திருத்துழாய்மாலையையுடையஸர்வேஸ்வரனைக் கண்டல்லதுதரிக்கமாட்டாதபடிசபலனை நான் எங்கேகாணக்கடவேன்? [என்றென்று] - பரத்வாதிகளைப் பெறுத நான்உன்னை நிரந் தரமாகச்சொல்லி. ஒருகால்சொல்லி "ஆசையை யாவிஷ்கரித்தோமிறே" என்று ஆறியிருக் கிறாரல்லரே;லாபத்தளவும் சொல்லுமித்தனையிறே [அங்கேதாழ்ந்தசொற்களால்]-தோளும், தோள்மாலையிலும், அந்த ஸௌஷித்வத்திலும் ப்ரவணமான சொற்களாலே. [அந்தண்குரு கூர்ச்சடகோபன்] - "உவதிஷ்டதூசோஅஸ்மவெழுவ்ராயய:" (உபதிஷ்டட்டந்துமாம் ஸர்வேவ்யாதய:)என்கிறபடியே, இவ்வாற்றுமைக்கெல்லாம் ஆடல்கொடுத்த ஆழ்வார்" என்று ஆளவந்தார் நிர்வாஹம். [செங்கேழ்சொன்னஇத்யாதி]-மநோவாக்காயங்கள் ஏகரூப மாய்ச்சொன்ன ஆயிரத்திலும் இப்பத்தையும். [வல்லார்கள்]-அப்யஸிக்கவல்லார். [இங்கே இத்யாதி] - இஹலோகத்திலே இஜ்ஜந்மத்திலே திவாராத்ர விஹாமின்றிக்கே ஸுகவநுஷவம் பண்ணி மகிழப்பெறுவர்: "ஆளக்கூப்பிட்டனைத்தக்கால்" என்று கூப்பிட வந்து

நிகமம்.—எங்கேகாண்கேன் இத்யாதி- "இவையும்பத்தும்வல்லாகள் இங்கே . இப் பிறப்பே மகிழ்வர்எல்லியுங்காலையே" என்ற பதங்களைக் கடாக்ஷித்துஅவதாரிகை - இத்திருவாய் மொழி இத்யாதி.

ஈன் - இனிதான என்றபடி. "அம்மான்" என்று ஸௌஷித்வம். வீப்ஸையெதன்ன - ஒருகால் இத்யாதி. "அங்கேதாழ்ந்த" என்றதுக்கு அர்த்தம் - தோளும் இத்யாதி. "அங்கே" என்று - "ஈன்துழாயம்மான்" என்றத்தைப் பராமர்ஸிக்கிறது. ஆழ்வார் துஃகிதராயிருக்க, "அந்தண் குருகூர்" என்னலாமோவென்ன-உவதிஷ்டதூ இத்யாதி. அதாவது "கர்மவஸ்யமென்றுதல், க்ருபாவஸ்யமென்றுதல்" இத்யாதிப்படியே சலியாதிருக்கையாலே, ஊரும் தழைத்ததென்றபடி. "உவதிஷ்டதூசோஅஸ்மவெழுவ்ராயய:வாஸுவ்ருஷ்ணிகா: । கூர்ஸ்ணோஅஹம்ஸஹிஷ்யாமி தஸ்மிந்ஹோ:வாஸவஸதி" ஜகதீஸ்வராவதாரகதீஷ்டம். ஆடல்கொடுத்த - இடங்கொடுத்த. "செங்கேழ்" என்று முழுச்சொல்லாய், செவ்விதாக என்றபடி. "இங்கே - இப்பிறப்பே-எல்லியுங் காலையும் - காண - மகிழ்வர்" என்று அன்வயித்துஅர்த்தம் - இஹலோகத்திலே இத்யாதி. இவர்க்கு

முகங்காட்டாத அவத்யத்தை இப்பத்தை யப்யஸித்தவர்களோடே கடுகவந்து முகங் காட்டித் தீருமாயிற்று ஈச்வரன்; பார்யையோடே வெறுப்புண்டானுல் அவள்பக்கல் முகம் பெறுகைக்காக ப்ரஜைகளை ச்லாகிப்பாரைப்போலே. (சக)

அகவதநுபவம் கிடையாதிருக்க, இப்பத்தை யப்யஸித்தார்க்குக் கிடைக்கக் கூடுமோவென்ன - ஆளக்கூப்பிட்டு இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம்-பார்யையோடே இத்யாதி. ஈன்தழாயம்மான் தன்னை யான் - எங்கேகாண்கேன் - என்றென்று, அங்கே தாழ்ந்த என்று தொடங்கி எல்லியுங் காலையும் - மகிழ்வர் இத்யந்வய:. (கக)

த்ரவிடோபநிஷத்வங்கதி.—வாகேஷவாநுகதம்வரிவா ரீர்ம்மொவநுஷ்நிதுஹநமீஜவாதிதவ்:। வனேயவதிதாவமதவ்யவஹா வூகாராநாவ்யாய ஸளரிராயிவஹ்ஷோஜாஹாவ ॥.

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.— கூஸுரெயுஹாவ்நிதகுவா வுஹகேடுதயா வூாதிதாவ்ளஸாயிகுவாஜீஷ்நிதஸுாஷோகுவாஹ்நிதவாவுஹகயாவஹு வாநிரெயாவஷோஜூாக । வாராயுாதாண்வாவ்நிரெநா ரவநிஹராஹுஷெ ராஜுாதகுவொமா ஜீவாவெகுஷாவுதீகுஷோஹவதிதவவெந ஸ்ரீவதிரெதயுஹாண் ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி

மாயன்வடிவழகைக்காணுதவல்விடா
யாய்அதறவிஞ்சியழுதலற்றம்—தூயபுகழ்
உற்றசடகோபனைநாமொன்றிநிற்கும்போதுபகல்
அற்றமொழுதானதெல்லியாம்.

ஆழ்வார்திருவடிகளே ஸரணம், எம்பெருமானார்திருவடிகளே ஸரணம், ஸ்ரீயர்திருவடிகளே ஸரணம்.

ஆறாந் திருவாய்மொழி—எல்லியும் ப்ரவேஸங்கள்.

அ.—(எல்லியுங்காலையும்.) - எம்பெருமான் என்னுடைய விடாயெல்லாம் தீரும்படி அருள்செய்தருளினன்.

ஒ.—ஆறாந்திருவாய்மொழியில், ஆழ்வாருடைய ஆர்த்தத்வனியைக் கேட்டு தப்தஹ்ருஷயனுப், அவருடைய ஆர்த்திதீரும்படி ஸம்ச்லேஷித்தருளுகைக்காக வரு கையிலே உத்யுக்தனை எம்பெருமான்,—ஸ்ரீரங்கநாதன்வானுக்குத் தாம் எழுந்தருளின ப்ரீதி ஸாத்மித்தால் திருவயோத்தியையிலே புக்கருளுகைக்காக ஸ்ரீரங்கத்வாஜ ஸுமவான் ஆஸ்ரமத்திலே பெருமாள் விட்டருளினற்போலேயும், ஸ்ரீவஸுதேவர் திருமகன்

தூதெழுந்தருளினபோது நேரேசென்று ஹஸ்திநபுரத்தில் புகாதே குஶஸ்தலத்திலே விட்டருளினாற் போலேயும், ஆழ்வார்தம்பாடு நேரவந்து புகுந்தருளாதே, தான்வந்த வரவில் இவர்க்குப் பிறந்த ப்ரீதி ஸாத்மித்தால் வந்து ஸம்ஶ்லேஷித்தருளுகைக்காகத் திருக்கடித்தானத்திலே வந்து புகுந்தருளித் தம்மோடே கலக்கிறபடியைக்கண்டு ப்ரீதராகிறார்.

ப.—ஆறாந்திருவாய்மொழியில், இப்படி அநுஷ்டானவிரோதத்தாலே அத்யந்தம் ஆர்த்தராய்க் கூப்பிட்ட இவ்வாழ்வாருடைய ஆர்த்திதீருகைக்காக "இவருடைய ஸகலவிரோதிகளையும்போக்கி ஸம்ஶ்லேஷிப்போம்" என்று ஈஶ்வரன் திருக்கடித்தானத்திலே ஆஸந்நமாக வந்து ஸந்நிஹிதனாயபடியை ப்ரகாஶிப்பிக்க; அவனுடைய ஆஸக்திநிதாநமான ஶோஷித்வத்தையும், அஶோஷவிரோதிநிவர்த்தகமான ஸாமர்த்யத்தையும், பராக்ரமஸைக்ர்யத்தால் வந்த வீரஶ்ரீயோகத்தையும், ஆந்தரவிரோதி நிவர்த்தகமான அந்தஃப்ரவேஶத்தையும், ப்ரத்பாஸக்திக்கடியான ப்ராப்யதேசவர்த்தித்வத்தையும், அவனிலும் அவன்தேசம் விரோதிநிவர்த்தகமென்னுமிடத்தையும், தேசஸம்ருத்திமாத்ரமே துஃகநிவர்த்தகமென்னுமிடத்தையும், ஆஸந்நதேசத்தினுடைய அஸாதாரண்யத்தையும், அர்ச்சாந்தரஸ்தலத்திலும் ஸந்நிஹிதனென்னுமிடத்தையும், ஆஸந்நதேசஸ்தநிதி அந்தஃப்ரவேஶார்த்தமென்னுமிடத்தையும் அநுஸந்யித்து, நெஞ்சிலே வந்து புகுந்து தம்முடைய விரோதியைப்போக்கி அநுபவிப்பதாக அத்யாஸந்நனை அவனுடைய அலிநிவேஶத்தைக்கண்டு தமக்குப்பிறந்த ஹர்ஷத்தை அருளிச்செய்கிறார்.

இ.—ஆறாந்திருவாய்மொழியில், * மாயக்கூத்தனில் ஆழ்வார்க்கோடின ஆர்த்தியளவன்று, ஈஶ்வரனுக்குப் பிறந்தவிடாய்; இது பேச்சுக்கு நிலமாகையாலே பேசலாயிற்று. அவனுக்குப் பேச்சுக்கு நிலமல்லாமையாலே பேசப்பெற்றதில்லை. "ஊயபுஂஶோஷாநு ஜீவிஷ்ய" என்றிறே இத்தலையில்லிடாய்; "நஜீவேயம் க்ஷணமபி" என்றிறே அத்தலையிருப்பது. கீழ் இவர் ஆர்த்தியோடேகூப்பிட முகங்காட்டப் பெறாமையாலே, "ஹீஸ்ரஷாஹிஶோதயா" என்று பிற்பாட்டுக்கு லஜ்ஜித்து, தப்தஹ்ருதயனாய், இவருடைய ஆர்த்திதீர ஸம்ஶ்லேஷிக்கைக்காக வருகையிலே உத்யுக்தனானவன், "ஒருகாலேசென்று முகங்காட்டில், ஒருகாலே ஆறுபெருகில் உடைகுலைப்படுமாபோலே இவர் ஶியிலராவர்" என்று இவர் பக்கலிலே நேரேவந்து புகுராதே, "வரவை அறிவித்து ப்ரீதி ஸாத்மித்தவாறே முகங்காட்டுவோம்" என்றுபார்த்து, பெருமாள் ஶ்ரீஹஸ்தாழ்வானுக்குத் தாம் எழுந்தருளின ப்ரீதி ஸாத்மித்தவாறே எழுந்தருளுகைக்காக ஶ்ரீஹஸ்த்வாஜஶுகவாநுஶ்ரமத்திலே

ற்போலேயும்; ஶ்ரீக்ருஷ்ணன் தூதெழுந்தருளுகிறபோது "நீனின்றிக்கே போய்ப்புக்கவாறே ஶத்ருராதிகள் ப்ரீதியாலே ஶியிலராகக்கூடும்" என்று, "கஸ்ஸஜ்ஜதெநிவஸதிஸவதூதரூபிதெஹஷ்ய தி" என்று வரவு வார்த்தையானவாறே பிற்றைநாள் ஹஸ்திநபுரத்திலே போய்ப் புக்காற்போலேயும் ஸம்ஶ்லேஷோந்முகனாய், திருக்கடித்தானத்திலேபுகுந்து நிற்கிறநிலையைக் காட்டிக்கொடுக்க, தம்மோடு கலக்கைக்கு ஒருப்பட்டு நிற்கிறநிலையை அநுஸந்யித்து க்ருதக்ருத்யராய், அத்தைப் பேசி இனியராகிறார். கீழில்திருவாய்மொழியில் வ்யஸநப்படுத்தின நீனவுதானே இப்போது உஜ்ஜீவநமாம்படி பண்ணினன். * செறுவாரும் நட்பாகுவரிறே செங்கோனருள் பெற்றவாறே.

ஈடு.— * மாயக்கூத்தனில், ஆழ்வார், தமக்கோடினவிடாய் பேச்சுக்கு நில மாகையாலே பேசினார்; ஈஸ்வரனுக்குஓடினவிடாய் பேச்சுக்கு நிலமல்லாமையாலே பேசிற்றில்லை. "ஊழுழுஞோவஸாஜீவிஷ்யே" (ஊர்த்த்வம்மாஸாந்நஜீவிஷ்யே) என்று இத்தலையில் விடாய்; "நஜீவெயம்க்ஷணமபி" (நஜீவேயம்க்ஷணமபி) என்றிறே அத் தலையிருப்பது. * "மாய்க்கூத்தனில் இவர்க்கோடினவிடாய்க்கு உதவப்பெற்றிலோம்" என்னுமத்தாலே தப்தனுய், ஆதுலனுய், பிற்பாட்டுக்கு "ஹ்ரீரேஷாஹ்ரிமமாதுலா" என்கிறபடியே லஜ்ஜித்து. "இனி நாம் கடகேமுகங்காட்டில் ப்ரீதியாலே உடகுலைப்படுவோர், ப்ரீதியை ஸாத்மிப்பித்து உளராக்கிப் பரிமாறவேணும்" என்று, பதினலாண்டு பிரிவாலே நொந்த ஸ்ரீ ஹரதாழ்வானை ப்ரிப்பித்து முகங்காட்டுகைக்காகத் திருவடியைப் போகவிட்டு, ஸ்ரீ ஹரத்வாஜாஸ்ரமத்திலே இருந்தாற்போல்வும்; பாண்டவர்களுக்காகத் தூதுபோகிறபோது, ப்ரேமபரவஸரான விதுராதிகள் ப்ரீதியை அகலுரிப்படுத்தி முகங்காட்டுகைக்காக, *"குஸ்ருஷுரேநிவஸதிஸச ப்ராதரிஹேஷ்யதி" (குஸ்ருஷுரேநிவஸதிஸச ப்ராதரிஹேஷ்யதி) என்கிறபடியே - குசஸ்த் தலத்திலே விட்டுக்கொண்டிருந்து, பிற்றைநாள் ஹஸ்திநபுரத்திலே எழுந்தருளினாற்போல வும்; தம்மோடே ஸம்ஸ்லேஷோந்முகனை ஸர்வேச்வரன், தம்முடைய ப்ரீதியை ஸாத் மிப்பித்துத் தம்மோடே கலக்கைக்காகத் திருக்கடித்தானத்திலே எழுந்தருளியிருந்து, தம் பக்கல் பண்ணுகிற வ்யாமோஹத்தை அநுஸந்தித்து இனியராய், அத்தைப்பேசி அநுபவிக் கிறார். கீழில் திருவாய்மொழியில் வ்யஸநஹேதுவான நினைவுதானே இப்போது உஜ்ஜீவ நமாம்படி பண்ணினான். * சேறுவாரும் நட்பாகுவரிறே சேங்கோனருள்பெற்றவாறே.

எல்லியும்காலையும் ப்ரவேசம்: தம்முடையவிடாய் சொன்னாற்போலே அவனுடைய விடாயையும் சொல்லவேண்டாவோவென்ன - மாயக்கூத்தனில் இத்யாதி. அப்படி அதிஸயித் திருக்குமோவென்ன - ஊழுழு இத்யாதி. ஸங்கதி - மாயக்கூத்தனில் இத்யாதி. ஆதுலனுய் - கால் பாவாதவனுயென்றபடி. இப்படி வ்யஸநாதிஸயத்தையுடையவனுகையாலே மாயக்கூத்த னில் என்றுகூட்டுவது. கீழேஅப்படி விடாய்த்தவரைப் பூர்ணமாக அநுபவிப்பியாதே, திருக்கடித் தானத்திலேவந்து நிற்கிறதுக்கு ஹேதுவேதென்ன - இனிநாம் இத்யாதி. இவ்விடத்திலே - "நாளைவதுவை" என்கிறதை அருளிச்செய்வர். வதுவை - விவாஹம். அதாவது - இன்று வதுவைனன்றே, "நாளைவதுவை" என்றது - ப்ரீதி ஸாத்மிக்கைக்காக என்றபடி. ஒருஸ்திரீ, தாரித்ர்யத்தாலே நொந்திருக்க, புத்ரன் தேடிக்கொண்டுவந்த தநாஸ்யை முன்னே சொரிய, ப்ரீதியாலே வாராநிற்கச்செய்தே, ப்ரீதி தலைமண்டையிட்டு முடிந்தாளென்கிற லௌகிககதையை அருளிச்செய்வர். "ஸாத்மிப்பித்து உளராக்கிப் பரிமாறவேணும்" என்றதுக்கு திருஷ்டாந்தம் - பதினலாண்டு இத்யாதி. கீழேயும் குணநுஸந்தாநமாயிருக்க, அங்கே துஃகமும், இங்கே ப்ரீதியுமாவா னென்? என்ன - கீழில்திருவாய்மொழியில் இத்யாதி. இதுகூடுமோவென்ன - சேறுவாரும் இத்யாதி. திருவிருத்தம், "சேமம்" இத்யாதி. சேறுவார் - வ்யாபகர். நட்பாதுவர் - உறவாவர்கள். "உவவுவாவுழிஹகுதாரவயாதொடுநடுக்ருஸ்ருஷுரேநிவஸதிஸச ப்ராதரிஹேஷ்யதி"

* ஹார - உத்தியோக (அசு-க) இப்போது அச்சிட் புத்தகத்தில் 'வ்யகுலயே' என்று பாடமுமுண்டு காண்கிறது.

முதற் பாட்டு.

எல்லியுங்காலையும் தன்னினினைந்தெழ
நல்லவருள்கள்நமக்கே தந்தருள் செய்வான்
அல்லியந்தண்ணந்துழாய்முடி அப்பனூர்
செல்வர்கள்வாழுந் திருக்கடித்தானமே.

அ.—ஒருவன் செய்தருளினபடியே என்றென்று நினைத்துக் கிடக்கும்படி அருள்செய்தருளினன்; அவ்வருள்தான் எதென்றால்,—முன்னம் திருக்கடித்தானத்திலே வந்து புகுந்தருளினனென்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், என்னுடைய ஆர்த்தி தீர்த்தருள்வான் ஸர்வேச்வரனே; அவன் ஊர் திருக்கடித்தானம் என்கிறார்.

[எல்லியுமென்று தொடங்கி] - காலதத்வமுள்ளதனையும் "ஒருவன் செய்தருளும்படியே" என்று தன்னினைவுக்கு உஜ்ஜீவிக்கும்படி. [செல்வர்கள்] - எம்பெருமானோடு நித்ய ஸம்ச்லேஷம்பண்ணுமவர்கள். [அல்லியித்யாதி] - கீழில் திருவாய்மொழியில், "நின்மொய்பூந்தாமத்தண்துழாய்" என்று ஆசைப்பட்டபடியே தோற்றி.

ப—முதற்பாட்டில், நமக்கு நிரதிசயோபகாரம்பண்ணவந்த ஸர்வேச்வரனானவன் தேசம் திருக்கடித்தானமென்கிறார்.

எல்லியும்காலையும் - ராத்ரிதிவாவிஹாகமில்லாதபடி, தன்னை-(உபகாரகனை) தன்னை, நினைந்து - ஸ்மரித்து, எழ - உஜ்ஜீவிக்கும்படியாக, (நிர்ஹேதுகமாகையாலே), நல்ல - விலக்ஷணமான, அருள்கள் - (ஆகமாநுஸந்தி அந்தஃப்ரவ்ருத்தி விரோதிநிவர்த்தக அநுலோமங்களுக்கடியான) நிரவதிகக்ருபைகளை, ("தாரன்பிறர்க்குன்னருளென்னிடை வைத்தாய்" என்கிற க்ரமத்திலே), நமக்கே - நமக்கே அஸாதாரணமாக, தந்து-தந்து, (மேலும் இடைவிடாமல்), அருள் - அருள், செய்வான் - செய்வானாய், ("காமத்தண் துழாய்க்கடிசேர் கண்ணிப்பெருமான்" என்று இவர் ஆசைப்பட்டாற்போலே), அல்லி - பூந்தாரையுடைத்தாய், அம் - ஔஜ்ஜ்வல்யமாய், தண்ணம் - குளிர்ந்த, துழாய் - திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதமான, முடி - திருமுடியையுடைய, அப்பன் - போக்யாபுள்ள உபகாரகனானவனுடைய, ஊர் - (அஸாதாரண) தேசம், செல்வர்கள் - (ஜ்ஞாநவத்கைங்கர்யஸம்பத்தையுடையரான) ஜ்ஞாநவதரானவர்கள், வாழும் - (அநுபவஅவிச்சேதத்தாலே ஆநந்திகளாய்) வர்த்திக்கிற, திருக்கடித்தானம் - திருக்கடித்தானமாம்.

இ.—முதற்பாட்டில், என்னுடைய ஆர்த்தி தீர்த்தருள்வான் ஸர்வேச்வரனே; அவன் ஊர் திருக்கடித்தானம் என்கிறார்.

[எல்லியும் இத்யாதி] - அஹோராத்ர விபாகமின்றிக்கே உபகாரகனை தன்னை, "ஒருவன் செய்தருளும்படியே" என்று நினைத்து நான் உஜ்ஜீவிக்கும்படியாக. [நல்லவருள்கள்] - இத்தலையில் குற்றம்பாராதே, வெறுமையே பார்த்துத் தன்பேறாக அருளுகை. * மாயக்கூத்தனில் விடாய்க்கருளினன் என்றிருக்கிறிலர். [நமக்கே தந்தருள் செய்வான்] - "பலரடியார் முன்பருளிய" என்று நித்யஸூரிகளும் தாம்பெற்ற

பேறு பெற்றிலர் என்றுயிற்று நினைத்திருப்பது. [அல்லியந்தண்ணந்துழாய் முடியப்பன்]-கீழில் திருவாய்மொழியில்-"மொய் பூந்தாமத்தண்டுழாய்க் கடிசேர் கண்ணிப்பெருமான்" என்று இவர் ஆசைப்பட்டபடியேயாயிற்று வந்துநிற்கிறது. [ஊர்செல்வர்கள் வாழும் திருக்கடித்தானமே] - [செல்வர்கள்] - முன்பு * மாயக்கூத்தனும், பின்பு * எல்லியும் காலையுமாக வேண்டாதவர்கள். ஸமவஶ்ரூலவமாகிற நிரவயிகஸம்பத்தை யுடையவர்கள். "லக்ஷ்மணோலக்ஷ்மிஸம்பந்நஃ". [வாழும்] - கைங்கர்யாநுலவம்பண்ணுகிற ஊர். செல்வர்கள் வாழும் ஊர் - திருக்கடித்தானமென்னுதல்; அப்படிப்பட்ட செல்வர்கள் வாழும் திருக்கடித்தானமென்னுதல். தண்ணந்துழாய் முடியப்பன் - அருள்செய்வான், அவன்நிற்கிற திருக்கடித்தானம் நமக்கு ப்ராப்யஸ்தலமென்கை. அப்பன் - உபகாரசீலன்.

ஈடு.—முதற்பாட்டு.—என்னுடைய ஆர்த்திதீர்த்தருளுவான் ஸர்வேச்வரனே; அவனூர் திருக்கடித்தானமென்கிறார்.

[எல்லியுங்காலையும் இத்யாதி] - நிவாராத்ர விஹாரமின்றிக்கே எல்லாக்காலத்திலும் உபகாரகனான தன்னை நினைத்து உஜ்ஜீவிக்கும்படி. [நல்லவருள்கள்] - என்குற்றமாதல், தன் ஸார்வஜ்ஞ்யமாதல் பாராதே, தன்பேறுகப்பண்ணின அருள். * மாயக்கூத்தனில் விடாய்க்கு அருளினனென்று இருக்கிறிலர். [நமக்கேதந்தருள் செய்வான்] - "பலரடியார்முன்பருளிய" என்கிறபடியே, நித்யஸூரிகளும் தாம் பேற்ற பேறு பேற்றிலர் என்றுயிற்று நினைத்திருப்பது. [அல்லியந்தண்ணந்துழாய்முடி] - கீழில்திருவாய்மொழியிலே "மொய்பூந்தாமத்தண்டுழாய்க்கடிசேர்கண்ணிப்பெருமானே" என்று இவர் ஆசைப்பட்டபடியே காட்டிக்கொடித்தான். [ஊர்] - இப்படி உபகாரகனனவன் வர்த்திக்கையாலே நமக்கு ப்ராப்யபூமி திருக்கடித்தானமென்கிறார். [செல்வர்கள்வாழ்ம்] - * மாயக்கூத்தனும் * எல்லியுங்காலையுமாக வேண்டாதே, அநுபவத்தோடே காலங்கழிக்கிறவர்கள்; "லக்ஷ்மணோலக்ஷ்மிஸம்பந்நஃ" (லக்ஷ்மணேலக்ஷ்மிஸம்பந்நஃ) என்கிறபடியேயிருப்பார் சிலர். [எல்லியும் இத்யாதி] - அப்பனனவனூர் என்னுதல்; செல்வர்கள்வாழும் ஊர் திருக்கடித்தானமென்னுதல்; அல்லியந்தண்ணந்துழாய் முடியப்பன் - நல்லவருள்கள் நமக்கேதந்து அருள்செய்வானென்னுதல். (க)

முதற்பாட்டு.—எல்லியும் இத்யாதி. "நமக்கேதந்தருள்செய்வான் - அப்பன், ஊர் - திருக்கடித்தானம்" என்றதத்தைக்கடாகஷித்து அவதாரிகை - என்னுடைய இத்யாதி.

"அப்பன்" என்றதத்தைப்பற்ற - உபகாரகன் என்றது. எழ - எழும்படி; உஜ்ஜீவிக்கும்படி. அருளுக்கு நன்மையேதென்ன - என்தன்மைமாதல் இத்யாதி. "தன்பேறுக" என்கிறதென்? கீழில்விடாய்க்காகவன்றே? என்ன - மாயக்கூத்தனில் இத்யாதி. "நமக்கே" என்றதவதாரணார்த்தம் - பலரடியார் இத்யாதி. தண்ணம் - முழுச்சொல்லு. குளிர்த்தி. "வாழும்" என்கிறவர்த்தமாநார்த்தம் - மாயக்கூத்தனும் இத்யாதி. அநுலவம் ஸம்பத்தேதாவென்ன - லக்ஷ்மணோலக்ஷ்மி இத்யாதி. செல்வர்கள்வாழும் திருக்கடித்தானம் - எல்லியும் காலையும் என்றுதொடங்கி, அப்பனனென்னுதல்; அன்றியே, எல்லியும் காலையும் என்றுதொடங்கி, அப்பனதாய் - செல்வர்கள் வாழும் ஊர் - திருக்கடித்தானமென்னுதல்; அன்றிக்கே, அல்லியந்தண்ணந்துழாய்முடியப்பன் - எல்லியும் காலையும் தன்னை நினைந்தெழ நல்லவருள்கள் நமக்கே தந்தருள்செய்வான்: அவனூர் செல்வர்கள்வாழும் திருக்கடித்தானமென்னுதல்; இது அவதாரிகாநுகுணம். (க)

இரண்டாம்பாட்டு.

திருக்கடித்தானமும் சன்னைடைச்சிந்தையும்
ஒருக்கடுத்து உள்ளேஉறையும்பிரான்கண்டீர்
செருக்கடுத்துஅன்றுதிகைத்தஅரக்கரை
உருக்கேட வாளிபோழிந்தவோருவனே.

அ.—(திருக்கடித்தானமும்.) பின்னையும் செய்தருளுகிறான். திருக்கடித்தானத்தையும் என்னெஞ்சையுமொக்கத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டருளினன். அவனுரென்னில்?—செருக்கடுத்துஅன்றுதிகைத்தவரக்கரை உருக்கெடவாளிபொழிந்த அத்விதீயன் கண்டீர்! என்கிறார்.

ஓ.—இரண்டாம்பாட்டில், என்பக்கல்வருகைக்கு ப்ரதிவைந்யகங்களையுமெல்லாம் எம்பெருமான் தானே போக்கி, திருக்கடித்தானத்திலும் என்னுடைய சிந்தையிலும் ஒக்க அஹிநிவேஶத்தைப்பண்ணி என்னுள்ளே வர்த்தியாநின்றான் என்கிறார்.

[பிரானென்று மேலுக்கு] - யுத்தகண்டேதியாலே மதிகெட்ட ராக்ஷஸரை ஶரீரம் அழியும்படி ஶரவர்ஷத்தை வர்ஷித்த உபகாரகன் கீடீர்!

ப.—அநந்தரம், அஶேஷவிரோதிநிவர்த்தநஸமர்த்தனை சக்ரவர்த்திதிருமகன், திருக்கடித்தானத்தையும் என்னெஞ்சையும் ஒருபடிப்பட நினைத்து வர்த்திக்கும் உபகாரசீலனென்கிறார்.

(ஶரவெலஊஜவெலங்களாலே), செரு-யுத்தத்திலே, கடுத்து - செருக்குமிஞ்சி, அன்று - (நீரிலேநெருப்பெழுந்தாற்போலே சீற்றம்விளையும்படி பெருமாளுக்கு அபராதம்பண்ணின) அன்று, திகைத்த - (ஆசைவெல்லலாமென்று) ப்ரமித்த, அரக்கர்-(ராவணுதி) ராக்ஷஸர், உரு - உருவம், கெட - அழிந்து ஒழிந்தமாம்படிக்கீடாக, வாளி - ஶரவர்ஷத்தை, பொழிந்த - வர்ஷித்த, ஒருவன்கண்டீர் - ஏகவீரனெவன்கிடீர், திருக்கடித்தானமும் - திருக்கடித்தானமாகிற திருப்பதியையும், (அப்படி அஹிதமதமான), என்னுடை சிந்தையும் - என் நெஞ்சையும், ஒருக்கடுத்து - ஒருமைப்படப்பிடித்து, உள்ளே - இரண்டுக்குள்ளே, உறையும் - வர்த்திக்கிற, பிரான் மஹோபகாரகன். இரண்டையுமொக்கப்பிடித்து என்னுள்ளே வர்த்திக்கிறவனென்றுமாம்.

இ.--இரண்டாம்பாட்டில், என்பக்கல் வருகைக்கு ப்ரதிவைந்யகங்களையும் தானேபோக்கி, திருக்கடித்தானத்திலும் என் ஹ்ருதயத்திலும் ஒக்க அஹிநிவேஶித்து, என்னுள்ளே வர்த்தியாநின்றான் என்கிறார்.

[ஒருக்கடுத்து] - ஒருங்கவடுத்து. அதாகிறது - ஒக்கநினைக்கை. திருப்பதியையும் என்ஹ்ருதயத்தையும் ஒக்க ஆதரித்து. [உள்ளேயுறையும்] - என்மநஸ்ஸிலே நித்யவாஸம் பண்ணாநின்றான். விரோதி செய்ததுஎன்? என்ன; அது ராக்ஷஸர்பட்டதுபட்டது. [செருக்கடுத்து] - யுத்தகண்டேதி வர்த்தித்து. [திகைத்த அரக்கரை] - சக்ரவர்த்திதிருமகனை வெல்ல நினைத்த மதிகேடரான ராக்ஷஸரை. [அன்று] - "நநஶேயு" என்றஅன்று. [உருக்கெட] - "ஹிந்நம்ஹிந்நம் ஶரௌகை:". [வாளிபொழிந்த] - "ஶரவஷை:". [ஒருவனை பிரான்கண்டீர்] - ஏகவீரனை உபகாரகன் கண்டீர்!

ஈடு.—இரண்டாம் பாட்டு. என்பக்கல் வருகைக்கு ப்ரதிபந்தகங்களாயும் தானேபோக்கி, திருக்கடித்தானத்திலும் என்ஹ்ருதயத்திலும் ஒக்கஅஹிநிவேசித்து என்னுள்ளே வர்த்தியாநின்ற னென்கிறார்.

[ஒருக்கடுத்து] - ஒருங்கவடுத்து. அதாகிறது - ஒக்க நினைக்கை. திருக்கடித்தானத்தையும் என்ஹ்ருதயத்தையும் ஒக்கவிரும்பி. [உள்ளேயுறையும்] - மநஸ்ஸிலே நித்யவாஸம்பண்ணுநின்றான். விரோதிசெய்ததென்? என்ன, - அது ராக்ஷஸர்பட்டது பட்டது. [செருக்கடுத்து] - யுத்தகண்டேதி வர்த்தித்து. [அன்று] - "நமமேயம்" (நமமேயம்) என்றவன்று. [திகைத்தவரக்கரை] - சக்ரவர்த்தித்திருமகனை வெல்லலாமென்று நினைத்த மதிகேடரான ராக்ஷஸரை. [உருக்கெட] - "ஸிம்ஹஸம்ஹிஸம்ஹரொஷ." (சிங்கம் சிங்கம்ஸரைர்த்தக்தம்). [வாளிபோழிந்த] - "ஸரவஷும்வவஷுஹ" (ஸரவர்ஷம் வவர்ஷஹ) என்கிறபடியே. [ஒருவன்] - ஏகவீரனானவன். (உ)

மூன்றாம் பாட்டு.

ஒருவரிருவரோர்மூவரெனநின்று
உருவுகரந்துஉள்ளுந்தோறுந்தித்திட்பான்
திருவமர்மார்வன் திருக்கடித்தானத்தை
மருவியுறைகின்ற மாயப்பிரானே.

அ.—(ஒருவர்.) பின்னையும் ஒருவராய் இருவராய் மூவராய்த்தோன்றி, உருவுதெரியாதபடி வந்து வாளிபொழிந்தவனென்று அவன் செயலையே அநுஸந்தித்து, அதுக்குமேலே, இன்று திருக்கடித்தானத்திலும் என்னெஞ்சிலும் பிராட்டியோடே கூடவந்து புகுந்தருளினனென்கிறார்.

ஓ —மூன்றும்பாட்டில், பிராட்டியோடேகூடத் திருக்கடித்தானத்தை மருவியுறையாநின்றுகொண்டு என்பக்கலிலே ஆஸ்சர்யமாம்படி ப்ரவணனானவன், உள்ளுந்தோறும் தித்தியாநின்றான் என்கிறார்.

[ஒருவ ரிருவ ரோர்மூவரெனநின்று உருவுகரந்து] - மூலபலத்தோடு யுத்தம் பண்ணியருளுகிறபோது முந்துற ஒருவராய்த்தோற்றிச் சாரிகையிலே வேகப்மிகமிக இருவரும் மூவருமாய்த்தோற்றி இந்த்ரியஸம்யோகத்துக்கு இடமில்லாதபடி வேகம்

இரண்டாம்பாட்டு.— திருக்கடித்தானம் இத்யாதி. "செருக்கடுத்தன்று" என்றதொடங்கி, "உள்ளேயுறையும்பிரான்கண்டீர்" என்கிற பதங்களைக்கடாக்ஷித்து அவதாரிகை - என்பக்கல் இத்யாதி.

ஸப்தார்த்தம் - திருக்கடித்தானத்தையும் இத்யாதி. உத்தரார்த்தமநுஸந்தித்து பூர்வார்த்தம்அநுஸந்திப்பது. திகைத்த - ப்ரமித்த. உரு - சரீரம்; ஸப்தஸ்வாரஸ்யம் - ஸரவஷும் இத்யாதி. தெதொராதொரொஹாதெஜாயநராராஹாயவீர ।ஹுவஷுராராக்ஷஸ வெஹநுதஹுராவஷுவவஷுஹ" இதியாகாணை (கூசகஅ). (உ)

மிக்கவாறே வடிவுதெரியாதபடியாய் உருக்கெட வாளிபொழிந்த ஒருவனென்று கீழில் பாட்டோடே அந்விதமாகக்கடவது.

ப.—அநந்தரம், பராக்ரமஸைக்ர்யத்தாலேவீர ஸ்ரீவிஸிஷ்டனானவன், திருக்கடித்தானத்திலே ஸந்நிஹிதனாய், எனக்கு லோக்யஸாதனுயிராநின்றானென்கிறார்.

(மூலபலநிரஸநத்தில் பராக்ரமஸைக்ர்யத்தாலே), ஒருவர் - (ப்ரதமம்) ஒருவராய், இருவர் - (பின்னை) இருவராய், மூவரென - (பின்) மூவரென்னும்படி, நின்று - நின்று, ஓர் - அத்விதீயமான, உருவு - ரூபம், கரந்து - (இலக்குக் குறிக்கமுவாண்ணுதபடி) இந்த்ரியாவிஷயமாய்க்கொண்டு, (உருக்கெட வாளிபொழிந்த ஒருவனனவன் அந்த வீரஸ்ரீயோடே வந்தானென்னும்படி), திரு - லக்ஷ்மியை, அமர் மார்வன் - திரு மார்பிலே உடையனுய்க்கொண்டு, திருக்கடித்தானத்தை - திருக்கடித்தானத்தை, மருவி - பொருந்தி, உறைகின்ற - நித்யவாஸம் பண்ணுகிற, மாயப்பிரான் - ஆஸ்சர்யோபகாரகனுய், உள்ளுந்தோறும் - நினைக்குந்தோறும், தித்திப்பான் - இனியனுகாநின்றான்.

இ.—மூன்றும்பாட்டில், பிராட்டியோடேகூடத் திருக்கடித்தானத்திலே வந்தானென்கிறார்.

"ஒருவரிருவர் மூவரெனநின்று உருவுகரந்து - உருக்கெட வாளிபொழிந்த ஒருவன்" என்று கீழாட்ட அந்விதமாகக்கடவது. மூலபலம் சாம்படி யருளு கிறவன்று முந்துற ஒருவனுய்த்தோற்றி, சாரிகையில் மீவரும் மிகமிக இருவரும் மூவருமாய்த்தோற்றி. [உருவுகரந்து] - வேகமும் மிக்கவாறே இந்த்ரியஸைதில்யாபத்துக்கு இடமில்லாதபடியாகையாலே, ரூபக்ரஹணயோக்யதாய் - உருக்கெடவாளிபொழிந்த ஒருவன் என்று அந்வயம். வ்யாவர்த்தித்த சடக்காலே ரூபம் கண்ணுக்குப் பிடிபடாதொழிகை. [திரு வமர்மார்வன்] - "நகுஸ்ரீர்நாவரோயுகி" என்னும் பிராட்டியோடே கூடவாயிற்று வந்தது. திருக்கடித்தானத்தோட்ட பொருந்திவர்த்திக்கிறவனுய், என்பக்கலிலே ஆஸ்சர்யமாம்படி ப்ரவணனான ஸர்வஸ்வதானன். [உள்ளுந்தோறும் தித்திப்பான்] - அநு ஸந்யிக்கஅநுஸந்யிக்கப் புதியனுய்க்கொண்டு ரஸியாநின்றான்.

ஈ.—மூன்றும் பாட்டு. பிராட்டியோடுகூடத் திருக்கடித்தானத்திலே நித்யவா ஸம்பண்ணுகிற ஆஸ்சர்யபூதனான உபகாரகன் அநுஸந்திக்குந்தோறும் இனியனுகாநின்றா னென்கிறார்.

[ஒருவர் இத்யாதி] - வாளிபொழிந்தடி எங்ஙனேயென்ன, - இங்ஙனே யென்கிறார். [ஒருவரிருவரோர்மூவரெனநின்று உருவுகரந்து] - ஒருவராய்த்தோன்று, இருவ ராய்த்தோன்று, மூவராய்த்தோன்று, பின்னை இந்த்ரியஅர்யஸம்யோகமில்லாதபடி சாரி கைவந்து. ஒருவரிருவரோர் மூவரென நின்று உருவுகரந்து - சேருக்கடித்தன்று திகைத்த அரக்கரை உருக்கெட வாளிபொழிந்தவோருவன் - திருக்கடித்தானமும் என்னுடைச்சிந் தையும் ஒருக்கடித்து உள்ளேயுறையும்பிரான் கண்டீர் என்று கீழிற்பாட்டோடே அந்வய

மூன்றும்பாட்டு.—ஒருவர் இத்யாதி. "திருவமர்மார்வன்" என்றுதொடங்கி, "மாயப் பிரான் - உள்ளுந்தோறும்தித்திப்பான்" என்றவற்றை அநுஸந்தித்துஅவதாரிகை - பிராட்டி யோடு இத்யாதி.

"ஒருவரிருவரோர்" இத்யாதிக்குஅர்த்தம் - வாளிபொழிந்த இத்யாதி. உருவுகரந்து சாரிகைவந்தவேகம், சக்ஷுரிந்த்ரியத்தாலே க்ரஹிக்கப்போகாதென்றபடி. சாரிகை வந்து - அதிவேகத்துடனே ஸாரிவந்து. "உருவுகரந்து" என்னுமளவும் கீழ்ப்பாட்டோடே அந்

மாகக்கடவது. [திருவமர்மார்வன்] — "ஸகஸ்ரநாமாயுதி" (ஸகஸ்ரநாமபராத்யதி) என்னும் பிராட்டியோடே கூடவாயிற்று வந்தது. [திருவமர்மார்வன் திருக்கடித்தானத்தை மருவியுறைகின்ற மாயப்பிரான் - உள்ளுந்தோறும்தித்திப்பான்] - பெரிய பிராட்டியார் நித்யவாஸம்பண்ணுகிற திருமார்வையுடையனுய், திருக்கடித்தானத்தை மருவியுறையாநின்றுகொண்டு என்பக்கலிலே ஆஸ்சர்யமாம்படி ப்ரவணனனவன், அநுஸந்திக்குந்தோறும் புதியனுய் இனியனுகாநின்றான். (கூ)

நான்காம் பாட்டு.

மாயப்பிரான் எனவல்வினைமாய்ந்தற
நேசத்தினுல் நெஞ்சம்நாடுகுடிகொண்டான்
தேசத்தமரர் திருக்கடித்தானத்தை
வாசப்பொழில் மன்னுகோயில்கொண்டானே.

அ—(மாயப்பிரான்) - இவன் திருக்கடித்தானத்தைக் காட்டிலும் என் னெஞ்சிலே, வல்வினைகள் தீரும்படி ஸ்நேஹத்தைப் பண்ணிக்கொண்டு குடியாக இருந்தருளினனென்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், எம்பெருமான் திருக்கடித்தானத்தைப் பகலிருக்கை மாத்ரமாகக்கொண்டு, என்னுடைய ஹ்ருதயத்தை, அத்யஹிநிவேஸத்தைப்பண்ணி நிரந்தர வாஸஸ்யோகமாகக் கொண்டருளினன் என்கிறார்.

[மாயப்பிரானென்று தொடங்கி] - ஆஸ்சர்யமான குணசேஷ்டிதாதிகளையுடைய ஸர்வேஸ்வரன் தன்னைப்பிரிந்து காணவாராயென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து நான் படும் துவகமெல்லாம் நிஸ்ஸேஷமாகப் போம்படி தன்னோட்டை ஸம்ஸ்லேஷ விஸ்லேஷங்களாலே நாடுபோலேவளர்ந்த நெஞ்சிலே ஸ்நேஹத்தாலே ஸபரிகரமாக நிரந்தரவாஸம் பண்ணுநின்றான். [தேசத்தமரரென்று தொடங்கி] - * அயர்வறுமமரர்களுக்கும் ப்ராப்யபூமியான திருக்கடித்தானத்தைத் தனக்கு வாசத்தையுடைய பொழிலோடுகூடின கோயிலாகக் கொண்டானனை மாயப்பிரான்.

ப.—அநந்தரம், திருக்கடித்தானத்தை வாஸஸ்யோகமாக ஸ்வீகரித்தவன், என்னுடைய ப்ரபலபாபங்களைப் போக்குகைக்காக நெஞ்சுக்குள்ளே நித்யவாஸம்பண்ணுநின்ற னென்கிறார்.

தேசம் - (நிரதிஸய) தேஜஸ்விகளான, அமரர் - ஸுரிகளுக்கு ப்ராப்யமாய், வாசம் - பரிமளோத்தரமான, பொழில் மன்னு - பொழில் சேர்ந்த, திருக்கடித்தானத்தை - திருக்கடித்தானத்தை, கோயில் - கோயிலாக, கொண்டான் - கொண்ட, மாயப்பிரான் - ஆஸ்சர்யோபகாரகனனவன், என - என்னுடைய, வல் - ப்ரபலமான, வினை - பாபங்கள், மாய்ந்து அற-நஸித்துப்போம்படியாக, நேசத்தினுல் - என்பக்கல் ஸங்

விதம். "திருவமர்மார்வன் - பிரான் - உள்ளுந்தோறும் தித்திப்பான்" என்று - தனியேவாக்யம். பாட்டுக்கு உரைக்கும் அன்வயம் - திருவமர்மார்வன் இத்யாதி. மஹத்தார்த்தம் - பெரியது இத்யாதி.

மாதிஶயத்தாலே, நெஞ்சம் - என்நெஞ்சாகிற, நாடு - விஸ்தீர்ணபூமியை, குடி - (தனக்குக்) குடியிருப்பாக, கொண்டான் - கொண்டான்.

இ.—நாலாம்பாட்டில், திருக்கடித்தானத்தைக் கலவிருக்கையாகக்கொண்டு ஸ்நேஹாதிஶயத்தாலே என்நெஞ்சை நிரந்தர வாஸஸ்தானமாகக்கொண்டான் என்கிறார்.

[மாயப்பிரான்] - ஆஶ்சர்யகுண சேஷ்டிதங்களையுடைய உபகாரகன். [என வல்வினைமாய்ந்தற] - தன்னைப்பிரிந்து நான்பட்ட துஃவமெல்லாம் நிஃஶேஷமாகப் போம்படி. மாயக்கூத்தனில் * காணவாராயென்றென்று கண்ணும்வாயும் துவர்ந்துபட்ட விடாயெல்லாம் வாஸனையோடே போம்படி. [நேசத்தினால்] - எனக்கு உபகரித்தாஞ யிருக்கையன்றிக்கே, என்பக்கல் ஸ்நாதிஶயத்தாலே. [நெஞ்சம்நாடு] - ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களாலே இவர்நெஞ்சு பரமபதம்போலே இடமுடைத்தானபடி. [குடிகொண்டான்] - ஸபரிகரமாக நித்யவாஸம் பண்ணுகின்றான் ; "அரவத்தமளியினணைந்தும்" என்கிறபடியே. [தேசத்தமரர் இத்யாதி] - நிரந்தர ஶுபவஉநுபவத்தாலே தேஜஸ்ஸையுடைய நித்யஸூரிகளுக்கு ப்ராப்யபூமியாய் - வாசத்தையுடைய பொழிலோடே கூடின - திருக்கடித்தானத்தை - கோயிலாகக்கொண்டு வர்த்திக்கிற - மாயப்பிரான் - நேசத்தினால் நெஞ்சம்நாடு குடிகொண்டான்.

ஈ.—நாலாம்பாட்டு. திருக்கடித்தானத்தைப் பகலிருக்கைமாத்ரமாகக் கொண்டு ஸ்நாதிஶயத்தாலே என்னெஞ்சையே நிரந்தரவாஸஸ்த்தாநமாகக் கொண்டானென்கிறார்.

[மாயப்பிரான்] - ஆஶ்சர்யமான குணசேஷ்டிதங்களையுடைய உபகாரகன். [எனவல்வினைமாய்ந்தற] - தன்னைப் பிரிந்து நான்பட்ட க்லேசமெல்லாம் நஶித்துப்போம்படி; * மாயக்கூத்தனில் * காணவாராயென்றென்று கண்ணும்வாயும் துவர்ந்து பட்டவிடாயெல்லாம் வாஸனையோடேபோம்படி. [நேசத்தினால்] - தான் என்பக்கல்பண்ணின ஸ்நேஹத்தாலே. [நெஞ்சம் நாடு] - ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களாலே ஒரு த்ரிபாத்விபூதிபோலே ஆக்கிணையிற்று, இவர்திருவுள்ளத்தை. [குடிகொண்டான்] - ஸபரிகரமாக நித்யவாஸம்பண்ணுகின்றான்: † அரவத்தமளிப்படியே. [தேசத்தமரர்திருக்கடித்தானத்தை] - நித்யாநுபவம் பண்ணுகையாலுண்டான தேஜஸ்ஸையுடைய நித்யஸூரிகளுக்கு ப்ராப்யமான திருக்கடித்தானத்தை. [வாசப்பொழில்மன்னு] - வாசத்தையுடைய பொழிலோடே கூடின. தேசத்தமரர் திருக்கடித்தானத்தை - கோயில்கொண்டான் - நேசத்தினால் நெஞ்சம் நாடு குடிகொண்டான். (சு)

நாலாம்பாட்டு.—மாயப்பிரான் இத்யாதி- "திருக்கடித்தானத்தை - கோயில்கொண்டான் - நேசத்தினால் நெஞ்சம் நாடு குடிகொண்டான்" என்றவற்றைக்கடாகூஷித்து அவதாரிகை - திருக்கடித்தான்த்தை இத்யாதி. பகலிருக்கை - பகலுக்குஓலக்கமிருக்கை.

கீழில்திருவாய்மொழியி லார்த்திக்கு அநுகுணமாக அர்த்தம் - தன்னைப்பிரிந்து இத்யாதி. ஏதத்விவரணம் - மாயக்கூத்தனில் இத்யாதி. அணுவான நெஞ்சு நாடாம்படியென்?என்ன - ஸம்ஶ்லேஷ இத்யாதி. இருந்தானென்னுமேல். "குடிகொண்டான்" என்றதுக்குஹாவம் - ஸபரிகாரமாக இத்யாதி. இதுக்கு ப்ரமாணம் - அரவத்தமளிப்படியே என்று. தேஜஸ்ஸேதென்ன - நித்யாநுபவம் இத்யாதி. மாயப்பிரானெனவல்வினைமாய்ந்தற - வாசப்பொழில்மன்னு - தேசத்தமரர் திருக்கடித்தானத்தை - கோயில்கொண்டான் - நேசத்தினால் நெஞ்சம்நாடு குடிகொண்டான் இத்யந்வயஃ. (சு)

---

† பெரியாழ்வார் திருமொழி, 5, 2, 10.

ஐந்தாம் பாட்டு.

கோயில்கோண்டான்தன் திருக்கடித்தானத்தைக்
கோயில்கோண்டான்அதனேடும் என்னெஞ்சகம்
கோயில்கொள் தெய்வமெல்லாந்தொழ வைகுந்தம்
கோயில்கொண்ட குடக்கூத்தவம்மானே.

அ.—(கோயில்கொண்டான்) - அங்குமிங்குமாய் இருந்தருளுகையன்றியே, ஸ்நேஹாதிசயத்தாலே திருக்கடித்தானத்தையுங்கொண்டு, என்னெஞ்சினுள்ளே புகுந்தருளினனென்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், என்பக்கலுள்ள ப்ரேமாதிசயத்தாலே, திருக்கடித்தானத்தோடேகூட என்ஹ்ருதயத்திலே புகுந்தருளினன் என்கிறார்

[கோயிலென்று தொடங்கி.] - நித்ய ஸித்தபுருஷர்கள் தன்னைத்தொழும் ஸ்ரீவைகுண்டத்தைக் கோயிலாகக்கொண்ட குடமாடுகைதொடக்கமான மநோஹாரியான சேஷ்டிதங்களையுடைய ஸர்வேச்வரன்.

ப —அநந்தரம், ப்ராப்யமான பரமபதத்திலே வர்த்திக்கிறவன், திருக்கடித்தானத்தோடே என்னெஞ்சை வாஸஸ்தாநமாகக் கொண்டானென்கிறார்.

கோயில்கொள் - விலக்ஷணவிமாநோபேதரான, தெய்வமெல்லாம் - நித்யஸூரிகள், தொழ - தொழும்படியாக, வைகுந்தம் - (ப்ராப்யதேச) பரமபதத்தை, கோயில் - வாஸஸ்தாநமாக, கொண்ட - உடையனுப், (ஆஸ்ரிதார்த்தமாக அவதரித்து), குடக்கூத்த - குடக்கூத்தாகிற (மநோஹாரிசேஷ்டிதத்தை யுடைய), அம்மான் - (க்ருஷ்ணனை) ஸ்வாமியானவன், திருக்கடித்தானத்தை - திருக்கடித்தானத்தை, தன் கோயில் - தனக்குஅஸாதாரணதேசமாக, கொண்டான் - ஸ்வீகரித்துக்கொண்டு, அதனேடும் - அதுதன்னோடே, என் - என், நெஞ்சகம் - நெஞ்சையும், கோயில் - (தனக்குக்) கோயிலாக, கொண்டான் - கொண்டான்.

இ.—அஞ்சாம்பாட்டில், என்பக்கல் ப்ரேமாதிசயத்தாலே திருக்கடித்தானத்தோடே கூடவந்து என்நெஞ்சிலே புகுந்தான் என்கிறார்.

[கோயில்கொண்டான் இத்யாதி] - திருக்கடித்தானத்தைத் தனக்கு அஸாதாரணமான கோயிலாகக்கொண்டான். [கோயில்கொண்டான் இத்யாதி] - "செருப்பு வைத்துத் திருவடித் தொழப்புக்காரைப்போலே யாகவொண்ணாது" என்று திருக்கடித்தானத்தோடே வந்துபுகுந்தான். [கோயில்கொள் தெய்வம்] - அநந்த முருட விஷ்வக்ஸேந ப்ரமுகர். பரமபதத்திலும் இவர்களுக்கும் ஓரோகோயிலுண்டாயாயிற்றிருப்பது. நித்யஸூரிகள் அநுபவிக்கப் பரமபதத்தைக் கோயிலாக உடையவன். [குடக்கூத்தவம்மான்] - ஸர்வேச்வரனைகையாலே நித்யஸூரிகளோபாதி ப்ராப்திபொத்திருக்க, "ஸம்ஸாரிகள் இழக்கவொண்ணாது" என்று க்ருஷ்ணனாய் வந்தவதரித்து, குடக்கூத்து முதலான மநோஹாரி சேஷ்டிதங்களைப் பண்ணி, அவதாரத்துக்குப் பிற்பாடனை எனக்காகத் திருக்கடித்தானத்தைக் கோயிலாகக்கொண்டு, அதுதன்னோடே வந்து என்நெஞ்சிலேபுகுந்தான்; "அழகிய பாற்கடலோடும்" என்கிறபடியே. திருக்கடித்தா

னத்தில் நிலை என்னைப்பெறுகைக்காகையாலே, ஸாயுஜ்யம் கைப்பட்டால் ஸாயுஜத்தில் இழிவாரில்லையிறே. இனியொரு முக்தவ்யஸாமி உண்டென்றிராதொழிகை.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. என்பக்கல் ப்ரேமாதிசயத்தாலே திருக்கடித்தானத் தோடேகூட என்ஹ்ருதயத்திலே புகுந்தருளினனென்கிறார்.

[கோயில்கொண்டான் இத்யாதி] - திருக்கடித்தானத்தைத் தனக்கு அஸாதா ரணமான கோயிலாகக்கொண்டான். [கோயில் இத்யாதி] - 'செருப்புவைத்துத் திரு வடிதொழுவாரைப்போலே ஆகவொண்ணுது" என்று, திருக்கடித்தானத்தோடேகூட வந்து என்னெஞ்சிலே புகுந்தருளினனென். [கோயில்கொள் இத்யாதி] - ஓரோ கோயில்க ளுண்டாயிருக்குமிறே - திருவடி, திருவநந்தாழ்வான், ஸேனைமுதலியார் இவர்களுக்கு; அவர்கள்தொழும்படி ஸ்ரீவைகுண்டத்தைத் தனக்குக் கோயிலாகக்கொண்ட ஸர்வேச் வரன், க்ருஷ்ணனுய்வந்து அவதரித்துக் குடக்கூத்தாடி, அந்தஸ்ரமமாறும்படி திருக் கடித்தானத்தைக் கோயில்கொண்டான்; அத்தோடேகூட "என்ஹ்ருதயத்தை – தனக் குக் கோயிலாகக்கொண்டான்; *அழகியபாற்கடலோடும்" என்கிறபடியே. திருக்கடித் தானத்தில் நிலை என்னைப் பெறுகைக்குஆகையாலே, ஸாத்யம் கைப்பட்டால் ஸாத நத்தி லிழிவாரில்லையாயிருக்க, என்னைப்பெற்றது அத்தேசத்திலே நிற்கையாலேயென்று அத்தேசத்தோடே வந்துபுகுந்தான். (நு)

ஆறும் பாட்டு.

கூத்தவம்மான் கோடியேனிடர்முற்றவும்
மாய்த்தவம்மான் மதுசூதவம்மானுறை
பூத்தபோழில் தண்திருக்கடித்தானத்தை
வத்தநில்லா குறிக்கோண்மினிடரே.

ஆ.—(கூத்தவம்மான்.) - இஸ்ஸம்ருத்தியெல்லாம் திருக்கடித்தானத்தை ஆச்ரயித்ததினாலே வந்ததென்னும் ப்ரீதியாலே, மது கைடபாதி ப்ரதிகூலநிரஸநம் பண்ணினாற்போலே ஸ்வகீயகுணசேஷ்டித ஆவிஷ்காரத்தாலே ஸ்வவிஸ்லேஷஜநிதமான என்னுடைய துக்கத்தைப் போக்கியருளினவன் உறைகின்ற திருக்கடித்தானத்தை வத்த

அஞ்சாம்பாட்டு.—கோயில் இத்யாதி. "அதேதடுமென்னெஞ்சகம் - கோயில்கொண் டான்" என்றதத்தைக் கடாகூஷித்துஅவதாரிகை - என்பக்கல்இத்யாதி. "திருக்கடித்தானத்தோடே இவர்ஹ்ருதயத்திலே புகுருகைக்கு ஹேது - 'இவரைப்பெற்றது இவ்வூரிலே நிற்கையாலே யன்றே' என்று இவர்பக்கல் ஆதராதிசயத்தாலே" என்னுமிடந்தோன்ற - என்பக்கல் ப்ரே மாதிசயத்தாலே என்கிறார்.

தன் - தனக்கு. "அதேதடும்" என்றதுக்குஹாவம் - செருப்புவைத்து இத்யாதி. திருக் கடித்தானத்தோடு என்னெஞ்சைக் கோயிலாகக் கொள்ளக்கூடுமோ? என்ன - அழகிய இத்யாதி. திருக்கடித்தானத்தோடேகூட இவர் திருவுள்ளத்திலே இருக்கிறதுக்கு ஹாவமேதென்ன - திருக் கடித்தானத்தில் இத்யாதி. 'கோயில்கொள்'என்று தொடங்கி, 'கூத்தவம்மான் - திருக்கடித்தா னத்தை - தன் - கோயில்கொண்டான்; அதேதடும்என்னெஞ்சகம் - கோயில்கொண்டான்' இத் யன்வயம். (ஙு)

வாருங்கோளென்று ஸ்ரீவைஷ்ணவர்களை அழைத்துக்கொண்டு, அவர்களோடுகூட வந்து ஸேவிக்கிறார்.

ஒ.—ஆறும்பாட்டில், மயூகைடஹாதிகளைப் போக்கினதற்போலே தன்னைக் காணப்பெறுத என்னுடைய விடாயெல்லாம் போக்கின ஸ்ரீவரவரன் நிரந்தரவாஸம் பண்ணுகிற திருக்கடித்தானத்தை வந்துகாள்; உங்களுடைய ஸம்ஸாரதாபங்களும் போம்; இத்தைக் குறிக்கொள்ளுங்கோள் என்று ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பரைக் குறித்து அருளிச்செய்கிறார்.

[கூத்தவென்று தொடங்கி] - மநோஹாரியான குணசேஷ்டிதாதிகளால் பெரியனும் நிரதிசயஸுகாவஹனான என்னுடைய ஸுகத்தைப்போக்கின என் ஸ்வாமி. [மதுசூதனென்று மேலுக்கு] - ப்ரதிகூல நிரஸநஸ்வபாவனான ஸ்ரீவரவரன் நிரந்தரவாஸம் பண்ணுவதுஞ்செய்து பூத்தபொழிலையுடைத்தாய் ப்ரமஹரமான திருக்கடித்தானத்தை.

ப.—அநந்தரம், விரோயிநிரஸநஸ்வபாவனானவன் வர்த்திக்கிற தேசந்தானே விரோயினையப் போக்கு மென்கிறார்.

கூத்த - மநோஹாரிசேஷ்டிதங்களாலே, அம்மான் - (லோகத்துக்கு) ஸ்வாமியாய், கொடியேன் - (“காணவேணும்” என்று பலகாலும் நிர்ப்பந்தித்துக் கூப்பிட்ட) கொடுமையையுடைய என், இடர் - நெஞ்சுஸுகத்தை, மாய்த்த - போக்கி, அம்மான் - அடிமைகொண்டவனுய், (ஆஸ்ரிதவிரோயினை), மதுசூதன்-மதுவை அழித்தாற்போலே அழிக்கும், அம்மான்-ஸ்வாமியானவன், உறை - வர்த்திக்கும்தேசமாய், பூத்த - புஷ்பஸம்ருத்தமான, பொழில் - பொழிலையுடைய, தண் - குளிர்ந்த, திருக்கடித்தானத்தை - திருக்கடித்தானத்தை, வந்த-ஸ்தோத்ரம்பண்ணினவளவிலே, இடர் - துஸுவங்கள் முற்றவும் - எல்லாம், நில்லா - நிலைகுலைந்துபோம்; குறிக்கொண்மின் - (இத்தைக்) குறிக்கொள்ளுங்கோள்.

இ.—ஆறும்பாட்டில், தம்முடைய ப்ரீதிப்ரகர்ஷத்தாலே, திருக்கடித்தானத்தை எல்லாரும் ஆச்ரயியுங்கோளென்று பரைக்குறித்து அருளிச்செய்கிறார்.

[கூத்தவம்மான்] - மநோஹரசேஷ்டிதங்களாலே பெரியனானவன். [கொடியேன்] - தன்னைப்பிரிகையாலே நிரதிசயஸுகாவஹனான என். [இடர்முற்றவும்] - என்னுடைய துஸுவங்கள் நிஸ்சேஷமாக. [மாய்த்தவம்மான்] - உருமாய்த்த என் ஸ்வாமி. [மதுசூதவம்மானுறை] - ப்ரதிகூலநிரஸநஸ்வபாவனான ஸ்ரீவரவரன் நித்யவாஸம்பண்ணுகிற தேசம். [பூத்தபொழில்] - அவன் நித்யவாஸம்பண்ணுகையாலே நித்யவஸந்தமான பொழில். கடாக்ஷவர்ஷம் மாறினிமேற பூ மாறுவது. [தண்திருக்கடித்தானத்தை] - ப்ரமஹரமான திருக்கடித்தானத்தை. [வந்தநில்லா இடர்] - இனியத்தைச்செய்ய, இடரானது, “நமக்கு தேசமன்று” என்று தானே போம். [குறிக்கொண்மின்] - இத்தை “ஓலக்கவார்த்தை” என்றிராதே, வேணுபண்ணுங்கோள்.

ஈடு—ஆறும்பாட்டு. தம்முடைய ப்ரீதிப்ரகர்ஷத்தாலே, திருக்கடித்தானத்தை எல்லாரும் ஆச்ரயியுங்கோ ளென்கிறார்.

ஆறும்பாட்டு.—கூத்தவம்மான் இத்யாதி. “குறிக்கொண்மின்” என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை - தம்முடைய இத்யாதி. இதில் பரோபதேசம் பண்ணுகைக்கடி - அருளிச்செய்கிறார் - தம்முடைய ப்ரீதிப்ரகர்ஷத்தாலே என்று.

[கூத்தவம்மான்] - மநோஹாரியான சேஷ்டிதங்களையுடைய ஸர்வேச்வரன். [கோடியேன்] - மஹாபாபியான என்னுடைய. [இடர்முற்றவும்மாய்த்தவம்மான்] - தன்னைப்பிரிந்து நான் பட்ட க்லேசத்தையெல்லாம் வாஸனையோடேபோக்கின என் ஸ்வாமி. [மதுசூதன் இத்யாதி] - ப்ரதிகூலநிரஸந ஸ்வபாவனான ஸர்வேச்வரன் நித்ய வாஸம்பண்ணுகிற தேசம். [பூத்தபொழில்]-அவன் நித்யவாஸம்பண்ணுகையாலே நித்ய வஸந்தமானபொழில். கடாக்ஷவர்ஷம் மாறிலிறே பூ மாறுவது? [தண்திருக்கடித்தானத்தை] - ப்ரமஹரமான திருக்கடித்தானத்தை. [ஏத்தநில்லா - இடர்] - இனியத்தைச் செய்ய, இடரானது "நமக்கு இது தேசமன்று" என்று * சும்மெனுதே கைவிட்டோடும். [குறிக்கொண்மின்] - இத்தை "ஓலக்கவார்த்தை" என்றிராதே, புத்திபண்ணுங்கோள்.

ஏழாம் பாட்டு.

கொண்மினிடர்கெட உள்ளத்துக்கோவிந்தன்
மண்விண்முழுதுமளந்த ஒண்தாமரை
மண்ணவர்தாந்தொழ வானவர்தாம்வந்து
நண்ணு திருக்கடித்தானகரே.

ஆ—(கொண்மின்) - கோவிந்தனுடைய மண் விண் முழுதுமளந்த ஒண் தாமரையை மண்ணவர்தாம் தொழுகிறபடியைக் காண்கைக்காக, வானவர்தாம்வந்து நண்ணு திருக்கடித்தானகரை நினையுங்கோள்; இடர்கெடுமென்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், உங்களுடைய ஸமஸ்தது:ஃவுகளும் போம்படியாகத் திருக்கடித்தானத்தை ஹ்ருதயத்தால் நினையுங்கோள் என்கிறார்.

[கோவிந்தனென்றுதொடங்கி] - எல்லார்க்கும் ஸுலபனான வனுடைய ஸகல லோகங்களையும் அளந்த நிரதிசயஸௌக்யமான திருவடிகளை ஒன்றும் அளவில்லாத ஸுமியிலுள்ளாரும் தொழ அவர்களுக்கு ஸுலபனாயிருந்த இருப்பைக் காண்கைக்காக பேரளவுடைய * அயர்வறுமமரர்களும் வந்து நண்ணுகின்றுள்ள திருக்கடித்தானகரை.

ப.—அநந்தரம், அவனுடைய தேஹஸம்ருத்திமாத்ரமே விரோயிநிவர்த்தக மென்கிறார்.

கோவிந்தன் - ஸர்வஸுலபனான ஔஜ்ஜ்வல்யத்தையுடையவனுடைய, மண்- பூமியையும், விண் - ஊர்த்வலோகத்தையும், முழுதும் - ஒன்றுழிபாமல், அளந்த - அளந்துகொண்ட, ஒண் - நிரதிசயஸௌக்யமான, தாமரை - திருவடித்தாமரைகளை, மண்ணவர் - பூமியிலுள்ளார், தாம் - தங்களுக்கு அஸாதாரணஸௌக்யமென்று, தொழ- தொழாநிற்க, வானவர் - (நித்யாநுபவம்பண்ணுகிற) பரமபதவாஸிகள், தாம் - தாங்களும், வந்து - (ஸீலாயிக்யமநுபவிக்கைக்கு) வந்து, நண்ணு - ப்ராபிக்கும்படியான, திருக்கடித்தானம் - திருக்கடித்தானமாகிற, நகரை - நகரத்தை, இடர் - து:ஃவமெல்லாம்,

---

அவன் நித்யவாஸம்பண்ணினால் நித்யவஸந்தமாகவேணுமோ வென்ன - கடாக்ஷவர்ஷம் இத்யாதி. "பூத்தபொழில்" என்கையாலே - ஸௌக்யத்தையாலே எத்தினர் என்று கருத்து ஸௌக்யத்தையாலே ஏத்தினால் இடர்போமோவென்ன - இனியத்தை இத்யாதி. சும்மெனுதே - மூச்சுவிடாதே. கூத்தவம்மான் இத்யாரப்ய ஏத்த - இடர் - நில்லா, குறிக்கொண்மின் இத்யந்வய:.

கெட - போகும்படியாக, உள்ளத்து - நெஞ்சிலே, கொண்மின் - கொள்ளும்படிபாருங் கோள்.

இ.— ஏழாம்பாட்டில், உங்கள் ஊழ்வினிவ்ருத்திக்கு ஏத்தவேண்டா; திருக் கடித்தானத்தை நெஞ்சாலே நினையுங்கோள் என்கிறார்.

[கொண்மின் இத்யாதி]- உங்கள் ஸமஸ்தஜந்துக்களும் போம்படியாகத்திருக் கடித்தானத்தை மநஸ்ஸாலே நினையுங்கோள். [கோவிந்தன் இத்யாதி] - ஸர்வஸ்மாலும் ஞானவனுடைய, ஸகலலோகங்களையும் வயிறாதே அளந்த. [ஒண்டாமரை]-ஒருசெவ் விப்பூவைக் கொண்டாயிற்று அளந்தது. [மண்ணவர் தாம்தொழ] - ஸௌலப்யத்தையும் ஸௌலப்யத்தையும் லோக்யத்தையும் அறியமாட்டாத அஜ்ஞர் தொழ. [தாந்தொழ] - பரமபதம் நித்ய ஸூரிகளுக்கேயாயிருக்குமாபோலே, உகந்தருளினதேசம் ஸம்ஸாரிகளுக்கேயாயிருக்கை. அந்யர்க்குவைத்த இறையிலியில் கண்ணுடையார்க்கு ப்ராப்தியில்லையிறே. [வான வர்] - அஸங்குசிதஜ்ஞாநராய் நித்யாநுபவம்பண்ணுமவர்கள் தாம்வந்து நண்ணுகிற தேசம். "நமக்கவ்வருகானவன், தாழ்வுக்கு எல்லையான ஸம்ஸாரிகள் தொழும்படி நிற்கிற சீலமிருந்தபடியென்?" என்று இத்தை அநுபவிக்கைக்கு இங்கேவந்து ஆஸ்ரயிக்கும் திருக்கடித்தான நகரை - கொண்மினிடர்கெட வுள்ளத்து. இங்குள்ளார் அங்கேபோவது மேன்மையை அநுபவிக்க; அங்குள்ளார் இங்குவருவது சீலகுணாநுபவம்பண்ண.

எ.— ஏழாம்பாட்டு. உங்கள் துःகநிவ்ருத்திக்கு ஏத்தவேண்டா, திருக்கடித் தானத்தை நெஞ்சாலே நினைக்க வமையு மென்கிறார்.

[கோள்மின் இத்யாதி] - உங்கள் ஸமஸ்ததுःகங்களும் போம்படியான திருக் கடித்தானத்தை மநஸ்ஸாலே நினையுங்கோள். [கோவிந்தன்] - ஸர்வஸ்மாலபனவ னுடைய. [மண்விண்முழுதுமளந்தவொண்தாமரை] - ஒருதாமரைப்பூவைக்கொண்டா யிற்று, பூம்யந்தரிக்ஷங்களை அளந்துகொண்டது. [மண்ணவர்தாந்தொழ] - இடக்கை வலக்கையறியாத பூமியிலுள்ளார்தொழ;பரமபதம் நித்யர்க்கேயாயிருக்குமாபோலே, உகந் தருளினதேசம் ஸம்ஸாரிகளுக்கேயாயிருக்கை. [வானவர் இத்யாதி] - ஸம்ஸாரிகளுக்கு மூகங்கொடுத்துக்கொடுநிற்கிற நீர்மையை அநுஸந்தித்து, நித்யஸூரிகளும் வந்துகிட்டுகிற தேசத்தை-கொண்மினிடர்கெடவுள்ளத்து. இங்குள்ளார் அங்குப்போவது மேன்மையை அநுபவிக்க; அங்குள்ளார் இங்குவருவது சீலகுணாநுபவம் பண்ணுகைக்கு. (எ)

ஏழாம்பாட்டு.—கொண்மின் இத்யாதி. "இடர்கெடவுள்ளத்து - கொண்மின்" என்றத் தைக்கடாக்ஷித்துஅவதாரிகை - உங்கள் இத்யாதி.

ஸப்தார்த்தம்-உங்கள்ஸமஸ்த இத்யாதி. அவ்வந்திருவடிகளென்னுதே, "தாமரை" என்று விஶேஷித்ததுக்கு ஹேது - ஒருதாமரை இத்யாதி. இத்தால் ஹேது - பரமபதம் இத்யாதி. ஸம் ஸாரிகளுக்காயிருக்கிறவிடத்திலே வானவர் வருவானென்? என்ன - ஸம்ஸாரிகளுக்கு இத்யாதி. இங்குள்ளாரங்கும், அங்குள்ளாரிங்கும் வருகிறதுஎதுக்காகவென்ன - இங்குள்ளாரங்கு இத்யாதி. கோவிந்தன் மண் விண்முழுதும் என்றுதொடங்கி, நகரை இடர்கெடவுள்ளத்து - கொண்மின் இத்யந்வய:. (எ)

எட்டாம் பாட்டு.

தானநகர்கள் தலைச்சிறந்தேங்கெங்கும்
வானிந்நிலங்கடல் முற்றுமெம்மாயற்கே
ஆனவிடத்தும் என்னெஞ்சுந்திருக்கடித்
தானநகரும் தனதாயப்படியே.

அ.—(தானநகர்கள்.) - இப்படி திருக்கடித்தானத்தை அநுஸந்தித்து, பின்னையும் தன்திறத்துச்செய்தருளின நன்மைபைச்சொல்லுகிறார். உம்முடையநெஞ்சும், திருக்கடித்தானமும் எம்பெருமானுக்குஇருப்பிடமாகச் சொன்னீர்; வானிந்நிலங்கடல் முற்றும் அவனுக்கிருப்பிடமல்லவோ? என்னில்,— அங்ஙனேயாகிலும் என்னெஞ்சும் திருக்கடித்தானமும் அவனுக்குப்பிறந்துடைய திருநகரியாயிருக்குமென்கிறார்.

ஒ —எட்டாம்பாட்டில், எம்பெருமானுக்கு ஸ்வாநமான விலக்ஷணமான நகரங்களெங்கும் டல உண்டாயிருக்கச்செய்தேயும், என்னுடைய நெஞ்சையும் திருக்கடித்தானத்தையும் தன்னுடைய ஔபயப்ராப்தமான ஸ்வாநமாக்கொண்டு ஸ்நேஹித்திருக்கும் என்கிறார்.

[தானநகரென்று தொடங்கி] - மேலில் லோகங்களிலும், ஔமி, கடலிலும் எல்லாவிடங்கள் எல்லாம் ஆஸ்சர்யஔதனவனுக்கு மிகவும் ஸ்லாக்யமான இருப்பிடமான நகரங்களாயிருக்கச்செய்தேயும்.

ப.—அநந்தரம், பரமபதாதி ஸர்வப்ரதேசத்திலும் ஸ்லாக்யமான ஸ்தாநங்களுண்டாயிருக்க, என்னெஞ்சும்திருக்கடித்தானமும் அவனுக்கு அஸாதாரண தேசமாகாநின்ற தென்கிறார்.

வான் - பரமபதம், இ - இந்த, நிலம் - பூமி, கடல் - க்ஷீராரண்ணவங்களாகிற, எங்கெங்கும் - எல்லாவிடத்திலும், தானம் - ஔவாஸஸ்தாநமான, நகர்கள் - நகரங்கள், முற்றும் - முற்றவும், தலை - தலைப்பட்ட, சிறந்து - சிறப்பையுடைத்தாய்க்கொண்டு, எம்மாயற்கே - எனக்கு ஆஸ்சர்யபூதனவனுக்கே, ஆனவிடத்தும் - ஆயிருக்கச்செய்தேயும், என் - என்னுடைய, நெஞ்சும் - நெஞ்சும், திருக்கடித்தானம் நகரும் - (இங்கிருக்கைக்காகவந்து ஸம்ச்லிஷ்டனை) திருக்கடித்தானமாகிற நகரமும், தன - தனக்கு, தாயம் – தாயப்ராப்தமான, படியே - அஸாதாரணதேசமாய் இராநின்றது.

இ.—எட்டாம்பாட்டில், அவனுக்கு விலக்ஷணமான நகரங்கள் பல உண்டாயிருக்கச்செய்தேயும், என்நெஞ்சையும் திருக்கடித்தான நகரையும் ஔபயப்ராப்தமான ஸ்வாநமாக விரும்பியிருக்கும் என்கிறார்.

[தானநகர் இத்யாதி] - [வானிந்நிலங்கடல் - எங்கெங்கும் - தலைச்சிறந்த - தானநகர்கள் - முற்றுமெம்மாயற்கே யானவிடத்தும்] - மேலில் லோகங்களிலும், ஔமியிலும், கடலிலும், கண்டவிடமெல்லாம் மிகவும் ஸ்லாக்யமான இருப்பிடமான நகரங்கள் முற்றும். [எம்மாயற்கே] - என்பக்கலிலே அஸம்ச்லிஷ்டனை ஆஸ்சர்யஔதனுக்கு. [ஆனவிடத்தும்] - ஆயிருக்கச்செய்தேயும். என்நெஞ்சும் திருக்கடித்தானநகரமும் தனக்கு ஔபயப்ராப்தமான ஸ்வாநமாக விரும்பியிராநின்றன.

எடு.—எட்டாம்பாட்டு. அவனுக்கு விலக்ஷணமானநகரங்கள் பலவுமுண்டாயிருக்கச்செய்தேயும், என்னுடைய நெஞ்சையும் திருக்கடித்தானத்தையும் தாயப்ராப்தமான ஸ்த்தாநமாக விரும்பியிருக்கு மென்கிறார்.

[தானநகர் இத்யாதி] - (வானிந்நிலங்கடல் - எங்கெங்கும் - தலைச்திறந்த - தானநகர்கள் - முற்றுமெம்மாயற்கேயானவிடத்தும்) - மேலில் லோகங்களிலும், பூமியிலும், கடலிலும், கண்டவிடமெல்லாம் மிகவும் ச்லாக்யமான இருப்பிடமான நகரங்கள்முற்றும் என்பக்கலிலே அஹிநிவிஷ்டனை ஆச்சர்யபூதனுக்கு. [ஆனவிடத்தும்] - ஆயிருக்கச்செய்தேயும். என்னெஞ்சும் திருக்கடித்தானநகரும் தனக்கு தாயப்ராப்தமான ஸ்த்தாநமாக விரும்பியிராநின்றன். (அ)

ஒன்பதாம் பாட்டு.

தாயப்பதிகள் தலைச்சிறந்தெங்கெங்கும்
மாயத்தினல் மன்னிவீற்றிருந்தாணுறை
தேசத்தமரர் திருக்கடித்தானத்துள்
ஆயர்க்கதிபதி அற்புதன்தானே.

ஆ.—(தாயப்பதிகள்.) - எல்லாம் அவனுக்குத் தாயப்பதிகளன்றேவென்னில், — அதுஅப்படியேயாகிலும் திருக்கடித்தானமென்றல் அவன்திருவுள்ளம் விழுந்துகிடக்கும்படி ஆச்சர்யமென்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், 'கீழ்ச்சொன்னவையெல்லாம் அவனுக்குத்தாயப்பதிகள் அல்லவோ?' என்னில்,— அதுஅப்படியாகிலும், என்றேஞ்சிடை ஸம்ச்லேஷிக்கைக்கு உறுப்பான நிலமென்று திருக்கடித்தானத்திலை அத்யஹிநிவிஷ்டனென்கிறார்.

[தாயப்பதிகளென்று தொடங்கி] - மிகவும் விலக்ஷணமாய்ப் பழையதாய் வருகிற ஸ்யாநங்களெங்கும் அஹிநிவேசத்தாலை விடாதே தன்ஐச்வர்யமெல்லாந் தோற்றும்படி இருந்தருளினவன் நிரந்தரவாஸம்பண்ணுகிற. [தேசத்தமரர் திருக்கடித்தானத்துள்] - தேஜஸ்ஸையுடைய நித்யஸூரிகளுக்கும் பரமப்ராப்யமான திருக்கடித்தானத்துள்.

ப—அநந்தரம், திருக்கடித்தானத்திலை நித்யவாஸம்பண்ணுகிற ஆச்சர்யபூதக்ருஷ்ணன்தானே அல்லாதஸ்த்தலங்களிலு மிருந்தானென்கிறார்.

தேசம் - தேஜஸ்விகளான, அமரர் - நித்யஸூரிகளுக்கு ப்ராப்யமான, திருக்கடித்தானத்துள் - திருக்கடித்தானத்துள்ளே, உறை - வர்த்திக்குமவனுய், ஆயர்க்கு - கோபர்களுக்கு, அதிபதி - நிரவதிகஸ்வாமியான, அற்புதன்தான் - ஆச்சர்யகுணசேஷ்

எட்டாம்பாட்டு.—தானநகர்கள் இத்யாதி. "தலைச்சிறந்த - தானநகர்கள் - திருக்கடித்தானநகரும் தனதாயப்பதியே" என்கிறபதங்களைக்கடாகூஷித்து அவதாரிகை - அவனுக்கு இத்யாதி.

"வான், இந்நிலம்" என்று பதமோதும். தலைச்சிறந்த - மிகவும்ச்லாக்யமான. எம்மாயற்கு. வானிந்நிலங்கடல் - எங்கெங்கும் - தலைச்சிறந்த தானநகர்கள் - முற்றும் - உண்டானவிடத்திலும், என்னெஞ்சும் திருக்கடித்தானநகரும் தனதாயப்பதியே இத்யந்வயம். (அ)

டிதங்களையுடையவன்தான், தாயம் - அஸாதாரணமான, பதிகள் - அர்ச்சாஸ்தலங்கள், எங்கெங்கும் - எல்லாவிடத்திலும், தலை - தலைப்பட்ட, சிறந்து - ஸீலாதிகுணஸம்பத்தையுடையவனுய்க்கொண்டு, மாயத்தினால் - ஆச்சர்யஸௌந்தர்யாதி விக்ரஹகுண விஸிஷ்டனுய், மன்னி - பொருந்தி, வீற்று - (பரவ்யூஹாதிகளிற்காட்டில் தன்னுடைய வ்யாவ்ருத்தி) தோன்றும்படியாய், இருந்தான் - இருந்தவன்.

இ—ஒன்பதாம்பாட்டில், 'கீழ்ச்சொன்னவையெல்லாம் அவனுக்குத்தாயப் பதிகள் அன்றே?' என்னில்,—அப்படியேயாகிலும், "என்னுடைய கிட்டினைக்கு உறுப் பானநிலம்" என்று திருக்கடித்தானத்திலே அஹிநிவிஷ்டனுனென்கிறார்.

[தாயப்பதிகள் இத்யாதி] - [தலைச்சிறந்த - தாயப்பதிகள் - எங்கெங்கும்] - மிகவும் விலக்ஷணமாய்ப் பழையதாய் வருகிறஸ்தாநங்களெங்கும். [மாயத்தினால்] - அஹிநிவேஷத்தாலேயென்னுதல், இச்சையாலே என்னுதல்: "மாயாவயுநம்ஜ்ஞாநம்". [மன்னிவீற்றிருந்தான்] - விரும்பி, தன்ஐச்வர்யமெல்லாம் தோற்ற இருந்தருளினவன். ஐச்வர்யத்தால்வந்த வேறுபாடுதோற்ற இருந்தவன் என்றுமாம். [உறை] - நித்யவாஸம்பண்ணுகிற. [தேசத்தமர்] - தேஜஸ்ஸையுடைய நித்யஸூரிகளுக்குப் ப்ராப்யபூமியான திருக்கடித்தானத்துள். [ஆயர்க்கதிபதி] - கோபஜாதியனுய் வந்தவதரித்து, அவர்களில் தலைவனுனவன். [அற்புதன்] - ஆச்சர்யமானபடிகளையுடையவன். உகந்தருளின தேசங்கள் எல்லாவற்றிலும் விருப்பம் உண்டாகிலும், என்னலஜ்ஜைக்குத் திருக்கடித்தானத்திலே தன்மேன்மையும் நீர்மையுமெல்லாம் ப்ர காசியாநின்றனன் என்கிறார்.

ஈ—ஒன்பதாம்பாட்டு. அல்லாததிருப்பதிகளுமெல்லாம் அவனுக்கு அப் படியேயன்றேவென்னில், - அதுஅப்படியேயாகிலும் "என்னுடைகிட்டினைக்கு உறுப் பானநிலம்" என்று திருக்கடித்தானத்திலே அத்யஹிநிவிஷ்டனுனென்கிறார்.

[தாயப்பதிகள் இத்யாதி] - (தலைச்சிறந்த - தாயப்பதிகள் - எங்கெங்கும்) மிகவும் விலக்ஷணமாய்ப் பழையதாய்வருகிற ஸ்தாநங்களெங்கும். [மாயத்தினால்] - அஹிநிவேஷத்தாலே யென்னுதல், இச்சையாலே என்னுதல். 'மாயாவயுநம் ஜ்ஞாநம்" (மாயாவயுநம்ஜ்ஞாநம்). [மன்னிவீற்றிருந்தான்] - விரும்பி, தன் ஐச்வர்ய மெல்லாந்தோற்றும்படி இருந்தருளினவன். ஐச்வர்யத்தால்வந்த வேறுபாடுதோற்ற இருந் தவனென்றுமாம். [உறை] - நித்யவாஸம்பண்ணுகிற. [தேசத்தமரர் இத்யாதி]-தேஜஸ் ஸையுடைய நித்யஸூரிகளுக்கு ப்ராப்யபூமியான திருக்கடித்தானத்துள். [ஆயர்க்கதி பதி] - கோபஸஜ்ஜாதியனுய் வந்தவதரித்து அவர்களில் தலைவனுனவன். [அற்புதன்] - ஆச்சர்யமானபடிகளையுடையவன். உகந்தருளின தேசங்களெல்லாவற்றிலும் விருப்ப

ஒன்பதாம்பாட்டு.—தாயப்பதிகள் இத்யாதி. "எங்கெங்கும் - தலைச்சிறந்த - தாயப்பதி களாயிருக்கச்செய்தேயும் - திருக்கடித்தானத்திலே - மாயத்தினால் - வீற்றிருந்தான்" என்றவற் றைக்கடாக்ஷித்து அவதாரிகை - அல்லாத இத்யாதி. அப்படியேயன்றே என்றது - தாயப்ராப்த மன்றேவென்றபடி.

"மாயம்" என்றல் - இச்சையைக்காட்டுமோவென்ன - மாயாவயு இத்யாதி. "வீற்றிருந்தான்" என்று முழுச்சொல்லாய், ஐச்வர்யமெல்லாம் தோற்றும்படியிருந்தான் என்னு தல்; "வீறு" என்றுபிரித்து, வேறுபாடு தோற்றவிருந்தான் என்னுதல். பாட்டுக்கு வலித்த

முண்டாகிலும், என்னை லஹிக்கைக்காகத் திருக்கடித்தானத்திலே, தன்மேன்மையும் நீர்மையுமெல்லாம் ப்ரகாசிக்கநின்ற னென்கை. (கூ)

பத்தாம் பாட்டு.

அற்புதன்நாராயணன் அரிவாமனன்
நிற்பது மேவி இருப்பதென்னெஞ்சகம்
நற்புகழ்வேதியர் நான்மறைநின்றதிர்
கற்பகச்சோலைத் திருக்கடித்தானமே.

ஆ—(அற்புதன்.) - இப்படி திருநாடு திருப்பாற்கடல் தொடக்கமாகவுள்ள திருநகரிக ளெல்லாவற்றிலும் அத்யந்தம் அஹிமதமாயிருந்த திருக்கடித்தானத்திலே நிற்பது; மேவியிருப்பது என்னெஞ்சகமென்கிறார்.

ஓ.—பத்தாம்பாட்டில், என்னைப்பெறுந்தனையும் திருக்கடித்தானத்திலே நின்றருளினன்; என்னெஞ்சு ஸம்ச்லேஷித்தபின்பு நிற்பதும் இருப்பதும் என்னெஞ்சிலே என்கிறார். இப்பாட்டுக்கெல்லாம் அநந்யப்ரயோஜநர் என்னும் புகழையுடைய வைதிக ர்களே உச்சரிக்கப்படாநின்றுள்ள நாலுவேதங்களும் நிரந்தரமாக முழங்காநின்றுள்ள கல்பகவநத்தை உடைத்தான திருக்கடித்தானத்தில் ஆஸ்ரிதவத்ஸலனும் ஆஸ்ரிதவிரோதி நிரஸநஸமர்த்தனும் ஆஸ்ரிதருடைய ஸர்வாபேக்ஷிதங்களும் முடித்துக்கொடுக்கும் ஸ்வ பாவனும் இப்படி அத்யாச்சர்யஹேதுவான திருநாமங்களையுடைய எம்பெருமான் நிற்பதும் மேவியிருப்பதும் என்னெஞ்சுக்குள்ளேயத்திலே. திருக்கடித்தானமென்று - ஸப்தம்யர்த்தத்தை ப்ரதமையாகிறது.

ப.—அநந்தரம், ஆஸந்நமான திருக்கடித்தானத்தில் நிற்கிறது என்னெஞ்சிலே பொருந்தி வர்த்திக்கைக்காக என்கிறார்.

அற்புதன் - (அநுபாவ்யமான) ஆச்சர்யசேஷ்டிதங்களையுடையனும், நாராயணன் - (அதுக்கு அநுரூபமான) ஸம்பந்தத்தையுடையனும், அரி - அநுபவவிரோதி நிரஸநசீலனும், வாமனன் - அர்த்தியாய்வந்து அநுபவிப்பிக்குமவன், மேவி-பொருந்தி, இருப்பது - இருப்பது, என் - என், நெஞ்சகம் நெஞ்சுக்குள்: நிற்பது - (அதுக்கு உறுப்பாகவந்து) நிற்பது, நற்புகழ் - அநந்யப்ரயோஜநத்வப்ரதையையுடையரான, வேதியர் - வைதிகருடைய, நால் - நாலு, மறை - வேதங்களும், நின்று - நின்று, அதிர் - முழங்குப்படியாய், கற்பகம்-கல்பகமயமான, சோலை-சோலையையுடைத்தான, திருக்கடித்தானம் - திருக்கடித்தானம்.

இ.—பத்தாம்பாட்டில், என்னைப்பெறுந்தனையும் திருக்கடித்தானத்திலே நின்றனன்: என்னெஞ்சு ஸம்ச்லேஷித்தபின்பு நிற்பதும் இருப்பதும் என்னெஞ்சிலே என்கிறார்.

ஹாவம் - உகந்தருளின இத்யாதி. 'தலைச்சிறந்த - தாயப்பதிகள் - எங்கெங்கும் மாயத்திறல்' என்று தொடங்கி, 'தேசத்தமரர் திருக்கடித்தானத்துள் - உறை - ஆயர்க்கதிபதியற்புதன்தானே இத்யங் வயது. (கூ)

[நாராயணன்] - தன்னுடைமையைவிட்டுக்கொடாத வத்ஸலன். "ரிவு ணாவேவதலுஃ" [அரி] - ஆஸ்ரிதவிரோதி நிரஸந ஸமர்த்தன். வபிற்றிலேபிறந்த ப்ரஜை தாயை அறிந்து நோர்முகம் பார்த்தால் அதின் தோஷம் போக்குகை. [வாமனன்] - தன்னைத்தாழவிட்டு ஆஸ்ரிதருடைய ஸர்வாபேக்ஷிதங்களையும் முடித்துக் கொடுக்குமவன். தான் அர்த்தியாய் வந்து கிட்டுமவன். [அற்புதன்] - கிட்டினால் அநுஷ்டிக்கைக்கு நிரதிஶயபோக்யனானவன். இப்படிகளாலே அத்யாஶ்சர்யபூதன். [நற்புகழித்யாதி] - அநந்யப்ரயோஜநரென்னும் புகழை புடைய வைதிகராலே உச்சரிக்கப்பட்ட நாலுவேதங்களினுடைய ப்ரதித்வநிபாலே முழங்காநின்றுள்ள கல்பகவனத்தையுடைய திருக்கடித்தானத்திலே - நிற்பது, மேவியிருப்பது என் நெஞ்சகமென்னுதல்; திருக்கடித்தானத்து - நாராயணன் அரிவாமனன் - அற்புதன் - நிற்பதும் மேவியிருப்பதும் என் நெஞ்சகமென்னுதல்: திருக்கடித்தானமென்று வஷ்டியுபயோகம்.

ஈடு.—பத்தாம்பாட்டு. என்னைப்பெறுமளவும் திருக்கடித்தானத்திலே நின்றான், என்னைப்பெற்றபின்பு நிற்பதுமிருப்பதும் என்னெஞ்சிலே யென்கிறார்.

[நாராயணன்] - தன்னுடைமையை விட்டுக்கொடாத வத்ஸலன். [அரி] - ஆஸ்ரிதவிரோதிநிரஸந ஸமர்த்தன். [வாமனன்] - தன்னைச் சிறுகவிட்டு ஆஸ்ரிதருடைய ஸர்வாபேக்ஷிதங்களையும் முடிக்குமவன். [அற்புதன்] - இப்படிகளாலே ஆஶ்சர்ய பூதன். [நற்புகழ் இத்யாதி]-அநந்யப்ரயோஜநர் என்னும் புகழையுடைய வைதிகராலே உச்சரிக்கப்பட்ட நாலுவேதங்களாலும் முழங்காநின்றுள்ள கல்பகவநத்தையுடைய திருக்கடித்தானத்திலே - அவன்நிற்பது, மேவியிருப்பது என்னெஞ்சகமென்னுதல்; திருக்கடித்தானத்து - நாராயணன் அரி வாமனன் - அற்புதன் - நிற்பதும் - என்னெஞ்சகம், மேவியிருப்பதும் - என்னெஞ்சகமென்னுதல். திருக்கடித்தானமென்று - ஸப்தம்யர்த்தே ப்ரதமை. (க0)

பதிநோராம் பாட்டு.

சோலத்திருக்கடித்தானத்து உறைதிரு
மாலை மதிள்குருகூர்ச் சடகோபன்சொல்
பாலோடமுதன்ன ஆயிரத்திப்பத்தும்
மேலைவைகுந்தத்து இருத்தும்வியந்தே.

பத்தாம்பாட்டு.— அற்புதன் இத்யாதி. "சோலைத்திருக்கடித்தானத்து - நாராயணன் நிற்பதும் மேவியிருப்பதுஎன்னெஞ்சகம்" என்றவற்றைக் கடாக்ஷித்து அவதாரிகை - என்னைப் பெறுமளவும் இத்யாதி-

வாத்ஸல்யாதிகளால் ஆஶ்சர்யபூதனென்கைக்காக, நாராயணாதி ஶப்தங்களுக்கு வ்யாக்யானம். வேதியர்புகழுக்கு நன்மையாவது - அநந்யப்ரயோஜநத்வம்; அதை அருளிச்செய்கிறார் - அநந்ய இத்யாதி. நான்மறை நின்றதிராநின்றுள்ளதுமாய், கற்பகச்சோலையையுமுடைய திருக்கடித்தானத்திலே. திருக்கடித்தானமென்று - ப்ரதமையாயிருக்க, ஸப்தமியாகச் சொல்லுவானென்? என்ன - திருக்கடிதானம் இத்யாதி. இரண்டாமந்வயம்-நற்புகழ்வேதியர் என்றுதொடங்கி மேலே வ்யாக்யாநத்திலிருந்தபடியே. (க0)

அ.—(சோலை) - சோலைத்திருக்கடித்தானத்துறை திருமால் கவிக்கு ப்ரதிபாத்யன். மதிள்குருகூர்ச் சடகோபன் கவிபாடுகிறனனல் இவையெங்ஙனேயிருக்கிறன. இவைவல்லாரை, எம்பெருமான் ஒருகூணம் பிரிவில் தரிக்கமாட்டானென்கிறார்.

ஒ.—நிமமத்தில், இத்திருவாய்மொழி கற்றவர்களை இதுதானே திருநாட்டில் கொடுபோய்விடுமென்கிறார்.

[சோலையென்றுதொடங்கி] - அழகிய திருச்சோலையையுடைய திருக்கடித்தானத்திலே உறைகிற ஸ்ரீயப்பதியை ஆழ்வார் அருளிச்செய்த பாலும்அமுதும்கலந்தாற்போலேயிருக்கிற வாச்யவாசகங்களுடைய பொருத்தத்தையுடைய ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி. [வியந்து] - அத்யாதரத்தைப்பண்ணி.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு மூலமாக பரமபதப்ராப்தியை அருளிச்செய்கிறார்.

சோலை - சோலைகளையுடைய, திருக்கடித்தானத்து - திருக்கடித்தானத்திலே. உறை - நித்யவாஸம்பண்ணுகிற, திருமாலை - ஸ்ரீயப்பதியைப்பற்ற, மதிள் - (அரணை) மதிளையுடைய, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வாருடைய, சொல்-சொல்லாய், (வாச்யவாசக ஸம்ப்ரதாயத்தில் இனிமையாலே), பாலோடமுதன்ன-பாலும்அமுதும் கலந்தாற்போலே யிருக்கிற, ஆயிரத்து - ஆயிரத்திருவாய்மொழியில், இப்பத்தும் - இப்பத்தும், மேலை - உத்துங்கதேசமான, வைகுந்தத்து - பரமபதத்திலே, (இத்திருவாய்மொழியில் ஸம்ஸ்லேஷ்யமுடையாரை), வியந்து - உகந்து, இருத்தும் - ப்ரதிஷ்டிதராக்கும். இது - கலிவிருத்தம்.

இ.—நிமமத்தில், இத்திருவாய்மொழி கற்றவர்களை, இதுதானே திருநாட்டிற் கொடுபோய்விடும் என்கிறார்.

